# தமிழ்நாட்டில் செமிகண்டக்டர் AI முன்னேற்றம் குறித்த நிலை என்ன?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி,ஜூலை.27-
தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், இந்தியா செமிகண்டக்டர் மிஷன் (ISM 2.0), தமிழ்நாட்டில் செமிகண்டக்டர் முதலீடுகள், இந்தியா AI மிஷன் மற்றும் பொது சேவை மையங்கள் (CSC) குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, 2024ஆம் ஆண்டு தமிழ்நாடு அறிவித்த செமிகண்டக்டர் கொள்கையின் கீழ் 50 சதவீதம் வரை கூடுதல் மூலதன மானியம் அறிவிக்கப்பட்டு,திருப்பெரும்புதூரில் வலுவான மின்னணு உற்பத்தி மையம் இருந்தபோதிலும், இந்தியா செமிகண்டக்டர் மிஷனின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஃபேப் (Fab) அல்லது டிஸ்ப்ளே திட்டங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்படாதது குறித்து அரசின் கவனம் சென்றுள்ளதா?

ISM 2.0 திட்டத்தில் உபகரணங்கள், மூலப் பொருட்கள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதால், தமிழ்நாட்டின் ATMP/OSAT மற்றும் வடிவமைப்பு சார்ந்த தொழில்துறைக்கு பாதிப்பு ஏற்படுமா?

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் ரூ.80,000 கோடி மதிப்பில் பரிசீலனையில் உள்ள தைவான் முதலீட்டு திட்டத்திற்கான துறைமுக வசதி, சிறப்பு பொருளாதார மண்டல அறிவிப்பு மற்றும் மின்சார ஒதுக்கீடு தொடர்பான ஒன்றிய அரசின் ஒப்புதல்களின் நிலை என்ன?

மேலும், இந்தியாவின் சொந்த செயற்கை நுண்ணறிவு (AI), பெரிய மொழி மாதிரி (LLM) திறனை உருவாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? இந்தியா AI மிஷனின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட GPU/ கணினி வள ஒதுக்கீடு மற்றும் AI சிறப்பு மையங்களுக்கான நிதி எவ்வளவு? தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும் பொதுச் சேவை மையங்களின் எண்ணிக்கை தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் எந்த நிலையில் உள்ளது? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்,-

'ஆத்மநிர்பர் பாரத்' நோக்கத்தின் அடிப்படையில், மின்னணு உற்பத்தி மற்றும் செமிகண்டக்டர் துறையின் முழு மதிப்புச் சங்கிலியையும் மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு கொள்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2014-15ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2025-26ஆம் ஆண்டில் மின்னணு பொருட்கள் உற்பத்தி 7 மடங்காகவும், ஏற்றுமதி 11 மடங்காகவும், மொபைல் போன் உற்பத்தி 33 மடங்காகவும், மொபைல் போன் ஏற்றுமதி 165 மடங்காகவும் உயர்ந்துள்ளது. தற்போது நாட்டில் விற்பனையாகும் மொபைல் போன்களில் 99.2 சதவீதம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் துறை சுமார் 25 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பல மின்னணு உற்பத்தி ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மணலூர் மற்றும் பிள்ளைப்பாக்கம் ஆகிய இடங்களில் மின்னணு உற்பத்தி குழுமங்கள் அமைக்க ஒன்றிய அரசு ஆதரவு வழங்கியுள்ளது.

செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சிக்காக 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட செமிகான் இந்தியா திட்டத்தின் கீழ், ஆந்திரப் பிரதேசம், அசாம், குஜராத், பஞ்சாப், ஒடிசா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களில் ரூ.1.64 லட்சம் கோடி முதலீட்டில் 12 உற்பத்தித் திட்டங்கள் ஒப்புதல் பெற்றுள்ளன. இதில் 3 ஆலைகள் ஏற்கனவே வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. முதலீட்டாளர்களே தங்களுக்கான இடத்தைத் தேர்வு செய்வதால், மத்திய அரசு அனைத்து மாநிலங்களிலும் பரவலான தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செமிகண்டக்டர் வடிவமைப்பு துறையை ஊக்குவிக்கும் வகையில், Design Linked Incentive (DLI) திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் கோயம்புத்தூரைச் சேர்ந்த பல நிறுவனங்களுக்கு நிதி மற்றும் மின்னணு வடிவமைப்பு தானியக்க (EDA) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டில் உள்ள 61 கல்வி நிறுவனங்களில் செமிகண்டக்டர் திறன் மேம்பாட்டிற்கு மத்திய அரசு ஆதரவு வழங்கி வருகிறது.

2026 ஜூலை 15ஆம் தேதி அமைச்சரவை ஒப்புதல் அளித்த Semicon 2.0 திட்டம், முந்தைய திட்டத்தின் எந்தப் பிரிவையும் நீக்கவில்லை. மாறாக, முழுமையான செமிகண்டக்டர் சூழலை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் ரூ.80,000 கோடி மதிப்பிலான தைவான் முதலீட்டு திட்டம் தொடர்பாக, கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எந்த விண்ணப்பமும் இதுவரை அமைச்சகத்திற்கு வரவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா AI மிஷனின் கீழ், 12 பெரிய மொழி மாதிரிகள் (LLM), 8 சிறிய மொழி மாதிரிகள் (SLM) உட்பட மொத்தம் 20 உள்நாட்டு AI மாதிரி முன்மொழிவுகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது. மேலும், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து 58 செயற்கை நுண்ணறிவு சிறப்பு மையங்களை (AI-CoE) அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டிற்கு 2 AI சிறப்பு மையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தியா-அமெரிக்கா ஒத்துழைப்பின் கீழ் AI ஆராய்ச்சி, கணினி வளங்கள் மற்றும் செயலி அணுகலை மேம்படுத்தும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுச் சேவை மையங்கள் (CSC) தொடர்பாக, 2026 மே 31 நிலவரப்படி நாடு முழுவதும் 5,01,731 CSC-களும், அதில் 3,91,160 கிராமப்புறங்களில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 18,632 CSC-கள் செயல்பட்டு வருவதுடன், அவற்றில் 12,379 கிராமப்புறங்களில் அமைந்துள்ளன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கொடுமுடி வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகளுக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி நலதிட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி. சந்திரகுமார், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் கொடுமுடி முத்துக்குமார், சிவக்குமார், நடராஜன், மொடக்குறிச்சி சு.குணசேகரன், உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி தலைவர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கடந்த மூன்று மாதங்களில்

# த.வெ.க. ஆட்சியில் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்!

## நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை .ஜூலை.27.
சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர். பெரிய கருப்பன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கல்லல் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட வைரவன்பட்டி, குன்றக்குடி, ஆத்தங்குடி, உட்பட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் நன்றியறிவிப்பு கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

கடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டது. தமிழகம் மட்டுமின்றி இந்தியாவே தளபதி ஆட்சியை பாராட்டியது. மக்கள் நல ஆட்சியினை தளபதி அவர்கள் நடத்தினார். அனைத்து தர மக்களாலும் பாராட்டப்பட்டார். ஐந்து ஆண்டுகளில் அவர் தீட்டிய திட்டங்கள் இன்று பல்வேறு மாநிலங்களில், இந்திய அளவில் பின்பற்றப்பட்டு பேசப்பட்டு வருகிறது முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் ஆகிறது. முதல்வர் விஜய் ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தினசரி கொலை குற்றங்கள் ,,லாக்கப் மரணங்ள் மற்றும் பல்வேறு தொடர் குற்ற சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சி மீது பல்வேறு அரசியல் கட்சி யினர் பொதுமக்கள் சமுக ஆர்வலர்கள் குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார்கள். கொரோனாவை விட மோசமான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. தொழிலாளர்கள், குழந்தைகள் பெண்கள், விவசாயிகள், உட்பட அனைத்து தரப்பினரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் கள் .

விஜய் தலைமையிலான ஆட்சி அமைந்தால் மாற்றம் வரும் என்று நம்பி வாக்களித்த வாக்காளர்கள் தற்பொழுது ஏன் வாக்களித்தோம் நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று மனம் நொந்து உள்ளார்கள். அத்தகைய ஆட்சி தமிழகத்தில் நடைபெற்று வருகின்றது. தமிழக மக்களை இவர்கள் எப்படி காப்பாற்றுவார்கள் என்ற எண்ணத்தில் இன்று தமிழகம் உள்ளது . அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்ட நிலையில் மீண்டும் கழகத் தலைவர் தளபதி தலைமையிலான ஆட்சி அமையும் தமிழக மக்களை காப்பாற்ற தி.மு.க . என்ற ஒரு இயக்கத்தினால் தான் முடியும் .இதை உணர்ந்து மக்கள் அனைவரும் அடுத்து நடைபெறும் உள்ளாட்சி தேர்தலில் கழகத்தினை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கே ஆர். பெரிய கருப்பன் பேசினார் .

நிகழ்ச்சிக்கு கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நா. நெடுஞ்செழியன் திருமலை முத்துராமலிங்கம், துணை செயலாளர் எஸ். முத்துக்குமார் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி ராஜ்குமார் பிள்ளையார்பட்டி சதீஷ் அயலக அணி சன் சீமான் சுப்பையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

சென்ற இடங்களில் எல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்துகேஆர். பெரிய கருப்பனை வரவேற்றார்கள்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம்

# சகாயநகர் ஊராட்சி தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!



குமரி, ஜூலை. 27 –
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், சகாயநகர் ஊராட்சி தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது வெள்ளமடம் ஆதித்தபுரம் பகுதியில் வைத்து ஒன்றியச் செயலாளர் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் பூதலிங்கம்பிள்ளை, பொதுக்குழு உறுப்பினர் ரஹ்மான், மாவட்ட பிரதிநிதி இம்மானுவேல், ஒன்றிய அவைத் தலைவர் சீனிவாசன், பொருளாளர் ராஜாபாபு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் மகேஷ் ஏஞ்சல், கழக நிர்வாகிகள் ஐயப்பன், அருணாசலம், அருச்சுணன், சுடலைமணிகண்டன், முருகேசன், ஜெகன் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகி கள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டது.

சகாயநகர் ஊராட்சிக்குட்பட்ட கிறிஸ்துநகர் சர்ச் தெரு, குருக்கள்மடம் பிரதானா சாலை, வெள்ளமடம் கீழத்தெரு, ஆசிரியர் காலனி ஆகிய பகுதிகளில் சாலை சீரமைப்பு பணிகள் செய்திடவுடம், பண்டாரபுரம் மற்றும் சகாயநகர் பகுதிகளில் புதிய பயணிகள் நிழற்குடை அமைத்திடவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஊராட்சி நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

விசுவாசபுரம் அரசு தொடக்கப் பள்ளிக்கு செல்லும் உப்பாத்து ஓடை பாலம் மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மிகுந்த கவனத்துடனும் அச்சத்துடன் செல்கின்றனர். எனவே சேதமடைந்து காணப்படுகின்ற பழைய பாலத்தினை இடித்து விட்டு புதிய பாலம் அமைத்திட பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகளை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

சகாயநகர் ஊராட்சி சண்முகபுரம் பகுதியில் உள்ள பாறையடி குளத்தில் உள்ள தண்ணீர் மழைக்காலங்களில் ஊருக்குள் புகாமல் இருக்க குளத்தினை முறையாக தூர்வாரி சீரமைத்திட வேண்டி நீர்வளத்துறை அதிகாரிகளை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகி களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு. கழகம் மற்றும் தோவாளை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருமுருகன்பூண்டி, ராக்கியாபாளையம் பகுதியில் நகர கழகத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கலைஞர் அறிவாலயம் கட்டிட அபிவிருத்தி பணிகளுக்காக கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ரூ.1 இலட்சம் நிதி வழங்கினார். உடன் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார், நகர கழக செயலாளர் கிருஷ்ணசாமி (எ) மூர்த்தி, மாவட்ட பிரதிநிதி மாணிக்க மூர்த்தி, வட்டக் கழக செயலாளர்கள் மனோகர், சிவக்குமார் உள்ளனர்.

### கருத்துகளைத் தெரிவிப்பதும் — அமைதியாக

# மாணவர்கள் போராட்டம் நடத்துவதும் அடிப்படை உரிமை! கைது செய்யும் போக்கு கவலை அளிக்கிறது!

## போபாலில் உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜால் பூயான் பேச்சு!

போபால், ஜூலை,27-
போபாலில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகம் நடத்திய நிகழ்ச்சி யில் உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜால் பூயான் கலந்து கொண்டார்.

அதில் உரையாற்றிய அவர், அமைதியாகப் போராடுவதும், கருத்துக்களை தெரிவிப்பதும் அடிப்படை உரிமைகள் எனத் தெரிவித்தார்.

விவாதமும், மாற்றுக் கருத்தும் ஜனநாயகத்தின் உயிர்நாடி என்றும் ஆனால், போராட்டங்கள் தற்போது குற்றச் செயல்களாகப் பார்க்கப்படுவதாகவும் கூறினார். கல்லூரிகளில் போராடும் மாணவர்கள் கூட கைது செய்யப்படுவதாகவும், 30, 40 நாட்கள் வரை அவர்கள் ஜாமின் இல்லாமல் சிறை வைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.


மாணவர்கள் நீதிமன்றங்களில் தங்களுக்கான நிவாரணம் பெற நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கங்கை நதிக் கரையில் இறைச்சி உண்பதை தடைசெய்ய சட்டம் எதுவும் இல்லை என்ற நிலையிலும், அதனை குற்றமாக கருதி கைது செய்யப்பட்டவர்கள் மூன்று மாதங்கள் சிறையில் இருக்க நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், பொதுமக்கள் இதனை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. இராமமூர்த்தி

### ஜூலை 27 (2013)



இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**